திருச்சிற்றம்பலம்

# 46-ஆம் திருமுறை மாநாடு 2026




# ஓதும்போட்டிப் பாடல்கள்

**திருமுறைகள் ஒலிக்கட்டும் திருவருள் பெருகட்டும்**

**வெளியீடு**

**திருமுறை மாநாட்டு ஏற்பாட்டுக் குழு**

ஒலிப்பேழையில் பாடியவர்:

*தேவார இசைமணி சிவத்திரு முத்துக்குமரன் ஓதுவார்*

*ஸ்ரீ வீரகாளியம்மன் ஆலயம்*

ஒலிப்பேழையில் முன்னுரை:

**சிவத்திரு கண்ணா கண்ணப்பன்**

செயலாளர், திருமுறை மாநாடு ஏற்பாட்டுக் குழு

திருச்சிற்றம்பலம்

பிரிவு R1, R2 & R3

**(02-01-2020** க்கும் **01-01-2022** க்கும் இடையே பிறந்தவர்கள் - N/K1/K2)

(பங்கு பெறுவோர் **மூன்று** பாடல்களையும் பயின்று வரவேண்டும்)

திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்

**பண்: குறிஞ்சி** தாளம் **: ஆதி**

திருச்சிற்றம்பலம்

**செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்**
**செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற**
**செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய**
**செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே.**

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசர் அருளிய **திருக்குறுந்தொகை**

ராகம்: மாயாமாளவகௌளை தாளம் : ஆதி

திருச்சிற்றம்பலம்

**பெருக லாந்தவம் பேதைமை தீரலாம்**
**திருக லாகிய சிந்தை திருத்தலாம்**
**பருக லாம்பர மாயதோ ரானந்தம்**
**மருக லானடி வாழ்த்தி வணங்கவே.**

திருச்சிற்றம்பலம்

**திருமூலர் அருளிய திருமந்திரம்**

**ராகம்: தேஷ் தாளம்: ஆதி**

திருச்சிற்றம்பலம்

**கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை**
**மங்காமல் பூசி மகிழ்வரே யாமாகில்**
**தங்கா வினைகளும் சாரும் சிவகதி**
**சிங்கார மான திருவடி சேர்வரே.**

திருச்சிற்றம்பலம்

பிரிவு **R4, R5 & R6**

**(02-01-2017** க்கும் **01-01-2020** க்கும் இடையே பிறந்தவர்கள் - P1/P2/P3)

(பங்கு பெறுவோர் நான்கு பாடல்களையும் பயின்று வரவேண்டும்)

திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்

**பண் : தக்கராகம்** **தாளம்: ரூபகம்**

திருச்சிற்றம்பலம்

**பூவார் கொன்றைப் புரிபுன் சடையீசா**
**காவா யெனநின் றேத்துங் காழியார்**
**மேவார் புரமூன் றட்டா ரவர்போலாம்**
**பாவா ரின்சொற் பயிலும் பரமரே.**

திருச்சிற்றம்பலம்

**திருநாவுக்கரசர்** அருளிய தேவாரம்

**பண் : காந்தார பஞ்சமம்** தாளம் **:ஆதி**

திருச்சிற்றம்பலம்

**பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை**
**ஆவினுக் கருங்கல மரனஞ் சாடுதல்**
**கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது**
**நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே.**

திருச்சிற்றம்பலம்

**சுந்தரர் அருளிய தேவாரம்**

**பண் : நட்டராகம்** தாளம் **: ரூபகம்**

**திருச்சிற்றம்பலம்**

**முன்னவன் எங்கள்பிரான் முதல் காண்பரி தாயபிரான்**
**சென்னியில் எங்கள்பிரான் திரு நீல மிடற்றெம்பிரான்**
**மன்னிய எங்கள்பிரான் மறை நான்குங்கல் லால்நிழற்கீழ்ப்**
**பன்னிய எங்கள்பிரான் பழமண்ணிப் படிக்கரையே.**

**திருச்சிற்றம்பலம்**

சேக்கிழார் அருளிய பெரியபுராணம்

**ராகம்: மத்திமாவதி** **தாளம்: ஆதி**

திருச்சிற்றம்பலம்

**சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்**
**பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கியஞானம்**
**உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்**
**தவமுதல்வர் சம்பந்தர் தாம்உணர்ந்தார் அந்நிலையில். 70**

## பிரிவு R7, R8 & R9
## (02-01-2014 க்கும் 01-01-2017 க்கும் இடையே பிறந்தவர்கள் P4/P5/P6)
(பங்கு பெறுவோர் நான்கு பாடல்களையும் பயின்று வரவேண்டும்)

### திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்

**பண் : சாதாரி** தாளம் : **ஆதி/கண்ட சாபு**

**திருச்சிற்றம்பலம்**

**மருந்தவை மந்திர மறுமைநன் னெறியவை மற்றுமெல்லாம்**
**அருந்துயர் கெடுமவர் நாமமே சிந்தைசெய் நன்னெஞ்சமே**
**பொருந்துதண் புறவினிற் கொன்றைபொன் சொரிதரத் துன்றுபைம்பூம்**
**செருந்திசெம் பொன்மலர் திருநெல்வேலி யுறை செல்வர்தாமே.**

திருச்சிற்றம்பலம்

### திருநாவுக்கரசர் அருளிய தேவாரம்

**பண் : பழந்தக்கராகம்** தாளம் : **ரூபகம்**

திருச்சிற்றம்பலம்

**சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே**
**பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்**
**முன்மாலை நகுதிங்கண் முகிழ்விளங்கு முடிச்சென்னிப்**
**பொன்மாலை மார்பனென் புதுநலமுண் டிகழ்வானோ**

திருச்சிற்றம்பலம்

### சுந்தரர் அருளிய தேவாரம்

**பண் : பழம்பஞ்சுரம்** தாளம் : **மிஸ்ரசாபு**

திருச்சிற்றம்பலம்

**மற்றுப் பற்றெனக்கின்றி நின்திருப்பாதமே மனம் பாவித்தேன்**
**பெற்றலும் பிறந்தேன் இனிப்பிறவாத தன்மைவந்து எய்தினேன்**
**கற்றவர்தொழு தேத்துஞ் சீர்க்கறையூரில் பாண்டிக் கொடுமுடி**
**நற்றவா உனை நான்மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே. 01**

திருச்சிற்றம்பலம்

### கருவூர்த் தேவர் அருளிய திருவிசைப்பா

**ராகம்: ஆனந்த பைரவி** **தாளம்: ஆதி**

திருச்சிற்றம்பலம்

**அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட**
**அங்ஙனே பெரியநீ சிறிய**
**என்னைஆள் விரும்பி என்மனம் புகுந்த**
**எளிமையை யென்றும்நான் மறக்கேன்**
**முன்னம்மால் அறியா ஒருவனாம் இருவா**
**முக்கணா நாற்பெருந் தடந்தோட்**
**கன்னலே தேனே அமுதமே கங்கை**
**கொண்டசோ ளேச்சரத் தானே**

திருச்சிற்றம்பலம்

பிரிவு R10 & R11

(02-01-2010 க்கும் 01-01-2014 க்கும் இடையே பிறந்தவர்கள் Sec 1- 4)

(பங்கு பெறுவோர் ஐந்து பாடல்களையும் பயின்று வரவேண்டும்)

திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்

**பண் : நட்டராகம்** தாளம் **:** ஆதி

**திருச்சிற்றம்பலம்**

**மின்னு லாவிய சடையினர் விடையினர் மிளிர்தரு மரவோடும்**
**பன்னு லாவிய மறையொலி நாவினர் கறையணி கண்டத்தர்**
**பொன்னு லாவிய கொன்றையந் தாரினர் புகழ்மிகு கீழ்வேளூர்**
**உன்னு லாவிய சிந்தையர் மேல்வினை யோடிட வீடாமே.**

திருச்சிற்றம்பலம்

**திருநாவுக்கரசர் அருளிய தேவாரம்**

திருத்தாண்டகம் தாளம் **: ஆதி**

திருச்சிற்றம்பலம்

**எல்லா உலகமு மானாய் நீயே**
**ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே**
**நல்லாரை நன்மை யறிவாய் நீயே**
**ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே**
**பொல்லா வினைக ளறுப்பாய் நீயே**
**புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே**
**செல்வாய செல்வந் தருவாய் நீயே**
**திருவையா றகலாத செம்பொற் சோதீ.**

திருச்சிற்றம்பலம்

**மாணிக்கவாசகர் அருளிய திருவாசம்**

**ராகம் : நீலாம்பரி** தாளம் **: கண்டசாபு**

திருச்சிற்றம்பலம்

**மாதாடு பாகத்தன் உத்தர கோசமங்கைத்**
**தாதாடு கொன்றைச் சடையான் அடியாருள்**
**கோதாட்டி நாயேனை ஆட்கொண்டென் [தொல்பிறவித்**
**தீதோடா வண்ணந் திகழப் பிறப்பறுப்பான்**
**காதாடு குண்டலங்கள் பாடிக் கசிந்தன்பால்**
**போதாடு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ.** 06

திருச்சிற்றம்பலம்

## சுந்தரர் அருளிய தேவாரம்

**பண்: தக்கேசி** தாளம் : **ஆதி**

**திருச்சிற்றம்பலம்**

**பொன்னும் மெய்ப்பொரு ளும்தரு வானைப்**
**போக மும்திரு வும்புணர்ப் பானைப்**
**பின்னை என்பிழை யைப்பொறுப் பானைப்**
**பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை**
**இன்ன தன்மையன் என்றறி வொண்ணா**
**எம்மா னைஎளி வந்தபி ரானை**
**அன்னம்வை கும்வ யற்பழ னத்தணி**
**ஆரூ ரானை மறக்கலு மாமே**

**திருச்சிற்றம்பலம்**

சேக்கிழார் அருளிய பெரியபுராணம்

**ராகம்: மத்திமாவதி** **தாளம்: ஆதி**

திருச்சிற்றம்பலம்

**ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை**
**வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர் மதிக்கொழுந்தைத்**
**தேன் நக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர் தொடுக்கும்**
**கானத்தின் எழுபிறப்பைக் கண் களிப்பக் கண்டார்கள்.**

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

## பிரிவு R12,R13 & R14

(02-01-2010 க்கு முன் பிறந்தவர்கள்)

(பங்கு பெறுவோர் ஐந்து பாடல்களையும் பயின்று வரவேண்டும்)

1. விரும்பிய ஒரு தேவாரப்பாடல்
   (ஒன்றாம் திருமுறை முதல் ஏழாம் திருமுறை வரை)
2. விரும்பிய ஒரு திருவாசகப்பாடல் (எட்டாம் திருமுறை)
3. விரும்பிய ஒரு திருவிசைப்பா பாடல் ( ஒன்பதாம் திருமுறை)
4. விரும்பிய ஒரு திருப்பல்லாண்டு பாடல் (ஒன்பதாம் திருமுறை)
5. விரும்பிய ஒரு பெரியபுராணப் பாடல்( பன்னிரண்டாம் திருமுறை )

திருச்சிற்றம்பலம்

# 07.048 திருப்பாண்டிக்கொடுமுடி

"அருள்மிகு பண்மொழிநாயகி உடனாகிய கொடுமுடிநாதர்
திருத்தாள் போற்றி போற்றி"

பண்: பழம்பஞ்சுரம் தாளம் : **மிஸ்ரசாபு**

திருச்சிற்றம்பலம்

மற்றுப் பற்றெனக்கின்றி நின்திருப்பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப்பிறவாத தன்மைவந்து எய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ் சீர்க்கறையூரில் பாண்டிக் கொடுமுடி
நற்றவா உனை நான்மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே. 01

இட்ட னும்மடி ஏத்துவார் இகழ்ந்திட்டநாள் மறந்திட்டநாள்
கெட்ட நாள் இவை என்றலால் கருதேன்கிளர் புனல்காவிரி
வட்ட வாசிகை கொண்டடி தொழுதேத்து பாண்டிக்கொடுமுடி
நட்டவா உனை நான்மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே. 02

ஓவு நாள் உணர்வழியும் நாள் உயிர்போகும் நாள்உயர் பாடைமேல்
காவும் நாள் இவை என்றலால் கருதேன்கிளர் புனல்காவிரிப்
பாவு தண்புனல் வந்திழி பரஞ்சோதி பாண்டிக்கொடுமுடி
நாவலா உனை நான்மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே. 03

எல்லையில்புகழ் எம்பிரான் எந்தைதம்பிரான் என்பொன்மாமணி
கல்லை யுந்தி வளம்பொழிந்திழி காவிரியதன் வாய்க்கரை
நல்லவர் தொழுதேத்துஞ் சீர்க்கறையூரிற் பாண்டிக் கொடுமுடி
வல்லவா உனை நான்மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே. 04

அஞ்சினார்க்கு அரண்ஆதியென்று அடியேனும் நான்மிக அஞ்சினேன்
அஞ்சலென்றடித் தொண்டனேற்கு அருள் நல்கினாய்க்கழி கின்றதென்
பஞ்சின் மெல்லடிப் பாவைமார்குடைந்தாடு பாண்டிக் கொடுமுடி
நஞ்சணி கண்ட நான்மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே. 05

ஏடுவான் இளந்திங்கள் சூடினை என்பின்கொல்புலித் தோலின்மேல்
ஆடு பாம்பது அரைக்கசைத்த அழகனே அந்தண்காவிரிப்
பாடு தண்புனல் வந்திழிபரஞ்சோதி பாண்டிக் கொடுமுடி
சேடனே உனை நான்மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே. 06

**விரும்பி நின்மலர்ப் பாதமேநினைந்தேன் வினைகளும் விண்டனன்**
**நெருங்கி வண்பொழில் சூழ்ந்தெழில்பெற நின்றகாவிரிக் கோட்டிடைக்**
**குரும்பை மென்முலைக் கோதைமார் குடைந்தாடு பாண்டிக்கொடுமுடி**
**விரும்பனே உனை நான்மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே. 07**

**செம்பொனேர் சடையாய் திரிபுரம் தீயெழச்சிலை கோலினாய்**
**வம்புலாங் குழலாளைப்பாகம் அமர்ந்து காவிரிக் கோட்டிடைக்**
**கொம்பின்மேற் குயில்கூவ மாமயிலாடு பாண்டிக் கொடுமுடி**
**நம்பனே உனை நான்மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே. 08**

**சாரணன்தந்தை எம்பிரான் எந்தைதம்பிரான் என்பொன் மாமணியென்று**
**பேரெணாயிர கோடி தேவர் பிதற்றிநின்று பிரிகிலார்**
**நாரணன் பிரமன்தொழும் கறையூரில் பாண்டிக் கொடுமுடிக்**
**காரணா உனை நான்மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே. 09**

**கோணியபிறை சூடியைக் கறையூரில் பாண்டிக் கொடுமுடி**
**பேணிய பெருமானைப் பிஞ்ஞகப் பித்தனைப் பிறப்பில்லியைப்**
**பாணுலாவரி வண்டறை கொன்றைத் தாரனைப்படப் பாம்பரை**
**நாணனைத்தொண்டனூரன் சொல்லிவை சொல்லுவார்க்கில்லைதுன்பமே.10**

**திருச்சிற்றம்பலம்**

**திருச்சிற்றம்பலம்**

- தமிழ் வேதப் பாடல்கள் யாவும் அறிவு கொண்டு பாடப்பட்டவை அல்ல. ஆண்டவரின் அருளால் பாடப்பட்டவை.
- எல்லோரும் கடவுளைத் தேடிச் சென்றார்கள். கடவுள் தமிழ் வேதப்பாடல்களைப் பாடிய அடியார் பெருமக்களை தேடி வந்தார்.
- சிதம்பரத்தில் மாணிக்கவாசகப் பெருமான் எட்டாவது தமிழ்வேதமாகத் திகழும் திருவாசகத்தைச் சொல்ல, இறைவர் தமது திருக்கரங்களால் எழுதினார்.
- தமிழ் மொழியில் திருப்பதிகம் பாடி இறையருளைப் பெறக்கூடிய அரிய வழியை காட்டியவர் காரைக்கால் அம்மையார்.
- திருப்பதிகம் பாடி இறையருளைப் பெறக்கூடிய அரிய வழியை இம் மண்ணுலகிற்கு அளித்தவர் திருஞானசம்பந்தர்.